Ti Nb
Ir Ta
Ru Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.
An ISO 9001 : 2008 Certified

Tiaano® 23 YEARS
Innovation In Inert Metals Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com Web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Jun. 15 : 870 Nos.
  - Up to May 15 : 859 Nos.
- **Performance Jun. 15 …**
  - Turnover growth : 0.87%
  - Employment growth : 0.55%
  - 100% Attendance : 8.93%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Equipments.

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## அழகு

அந்த அறிவிப்பு பலகையில் இப்படி எழுதப்பட்டிருந்தது. உங்கள் மனதில் எழும்புகிற கேள்விக்கான பதில்: 50,000 செடிகள். ஒரு சமயத்திற்கு ஒரு செடியாக நட்டது! ஒரு செடியாக நட்டது! இரண்டு கைகள், இரண்டு கால்கள், கொஞ்சம் மூளை உடைய ஒரே பெண்ணால் நடப்பட்டது! 1958-ல் இவ்வேலை தொடங்கப்பட்டது!

அந்தப் பெண் 40 வருடங்களுக்கு முன்னதாக தொடங்கி ஒரு சமயத்திற்கு ஒரு செடியாக நட்டு தன்னுடைய விடாமுயற்சியை நிறைவேற்றி அறியப்படாத அந்த மலை உச்சிப் பகுதிக்கே பெருமகிழ்ச்சியை கொண்டு வந்திருந்தார்கள். அந்த அறிவிப்பு பலகையை பார்த்த இன்னொரு தாய்க்கு அந்த நிமிடம், தன் வாழ்க்கையையே மாற்றுகிற அனுபவமாக அது இருந்தது.

தன்னுடைய இலக்குகள் மற்றும் ஆசைகள் நோக்கி ஒரு சமயத்திற்கு ஒரு அடியாக ஏன், குழந்தைகளின் காலடி போல் எடுத்து வைக்கவும் தான் செய்கிற காரியத்தை நேசிக்கவும், இப்படி கொஞ்சங் கொஞ்சமாக இறைவன் உதவியோடு தான் எடுக்கிற முயற்சிகளின் விளைவுகளை அந்த தாய் அறிந்து கொண்டார்கள்.

தினசரி நாம் எடுக்கும் சிறுசிறு முயற்சிகளினால் பிரம்மாண்டமான காரியங்களை சாதிக்க முடியும். உலகத்தை மாற்ற முடியும் என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

இதைப் பார்க்கும்போது நான் மிகவும் சந்தோஷப்பட்டாலும், எனக்கு குற்ற உணர்வினால் துக்கமும் உண்டாகிறது. நானும் இந்த பெண்ணைப் போல் ஏறத்தாழ 40 வருடங்களுக்கு முன்பாக என்னுடைய வாழ்க்கையில் செய்ய வேண்டிய காரியங்களை செய்திருந்தால் நான் எவ்வளவு சாதித்திருப்பேன்? என்று அந்த தாய் சொன்னார்கள். அதற்கு அவர் மகள் தன் தாயைப் பார்த்து, 'ஏன் நாளை நீங்கள் அதை தொடங்கக்கூடாது? இழந்து போன கடந்த காலத்தை யோசிப்பதில் பயனென்ன? என்றாள்.

நாம் கற்றுக் கொண்ட பாடத்தினால் வருத்தப்படுவதற்குப் பதிலாக கொண்டாட வேண்டுமானால் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி என்ன தெரியுமா? நான் கற்றுக் கொண்டதை இன்று நான் எப்படி இறை துணையோடு நடைமுறைப்படுத்துவது என்பதுதான்.

Compiled by Ms. P. E. Nancy
Director - Admin

## பொன்மொழிகள்

* கோபத்தை அன்பினாலும், தீமையை நன்மையினாலும், பொய்யை மெய்யினாலும் வெல்ல வேண்டும்.
* கல்வி இல்லாத மனிதன் செப்பம் செய்யப்படாத சலவைக்கல் போன்றவர்.
* பறக்கும் போது தான் மின்மினி ஒளிர்கிறது. வேலை செய்யும் போது தான் மனிதன் பிரகாசிக்கிறான்.

Compiled by Ms. B. Gomathy
Tiaano Vidyashrm

## FUNCTIONAL WISHES




**Happy Independence Day**
**15th AUGUST**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |
| ESI Corporation | Tambaram Dispensary |
| | Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. P. Suresh Baskar** — **13th Aug.**
Facilitation

**Mr. M. Sasi Kumar** — **15th Aug.**
Production

**Ms. P. E. Nancy** — **19th Aug.**
Director – Admin

**Mr. M. Vinodh kumar** — **22nd Aug.**
Coating

**Best Wishes from Tiaano Employees**

### Puzzle

To solve this puzzle, write the solutions for A, B, C in the grids. Once this is done, add these numbers together to reveal the answer to the fact in D.

**A.** The number of seconds in four minutes.
**B.** The number of hours in a day
**C.** The number of players in a soccer team
**D.** The number of words read by an average reader per minute.

A B D C

Ans: **A** – 240, **B** – 24, **C** – 11, **D** – 275.

Compiled By : Ms. V. Thenmozhi
Tiaano Vidyashrm

## கான்.:.பிடன்ஸ் கார்னர்

பாரிஸ் நகரத்தின் புகார் பெற்ற ஓபரா அரங்கம். மிகவும் பிரபலமான பாடகர் ஒருவரின் இன்னிசை நிகழ்ச்சி நுழைவுச் சீட்டுகள் அனைத்துமே விற்றுத் தீர்ந்தன. ஆனால் அந்தப் பாடகர் வரவில்லை. விழா ஏற்பாட்டாளர் மேடையில் ஏறி இதனை அறிவித்துவிட்டு "அவருக்கு பதிலாக, நல்ல திறமை வாய்ந்த உள்ளூர் பாடகர் ஒருவர் பாடுவார்" என்று அறிவித்தார்.

அறைகள் முழுவதும் அதிருப்தி அலைகள். ஏமாற்றத்தின் குரல்கள். உள்ளூர் பாடகர் மேடையேறினார். உயிரைக் கொடுத்துப் பாடினார். பாடிமுடித்தப் பிறகும், அவையினர் அமைதி இழந்து இருந்தனர். பாடியவருக்கும் சங்கடம். ஒரே ஒரு குழந்தை எழுந்தது சத்தமாகக் குரல் கொடுத்தது. "அப்பா! பிரமாதமாய் பாடினீங்க!" அரங்கின் இறுக்கம் உடைந்தது. கரவொலி எழுந்தது. நிற்காமல் தொடர்ந்தது.

குழந்தையுள்ளம், ஏமாற்றங்களைக் கடந்த சந்தோஷத்தை ஏற்படுத்தும்.

—கான்.:.பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## உங்கள் திறமைகளை பயன்படுத்துங்கள்

ஒரு எஜமான் தான் தூரதேச பயணம் போவதற்கு முன்னால், தன்னுடைய வேலையாட்களை அழைத்து தன்னுடைய ஆஸ்தியை அவர்கள் வசம் விட்டு அவரவர் திறமைக்கு ஏற்றபடி, ஒருவருக்கு ஐந்து பொற்காசுகளும், ஒருவருக்கு இரண்டு பொற்காசுகளும், மற்றொருவருக்கு ஒரு பொற்காசு-ம் கொடுத்தார்.

ஐந்து பொற்காசுகளைப் பெற்றவர், உடனடியாக போய், வாணிகம் செய்து மேலும் ஐந்து பொற்காசுகளைச் சம்பாதித்தார். அப்படியே இரண்டு பொற்காசுகளைப் பெற்றவரும் மீண்டும் இரண்டு பொற்காசுகளைச் சம்பாதித்தார். ஆனால் ஒரு பொற்காசு பெற்றவரோ, பூமியைத் தோண்டி தன்னுடைய எஜமானருடைய பொற்காசைப் புதைத்து வைத்தார்.

நீண்ட நாள் பிரயாணத்திற்குப் பின்பு, அந்த எஜமான் வந்து, அவர்களிடம் விசாரிக்கும் போது, முதலில் வந்து ஐந்து பொற்காசைப் பெற்றவர் ஐயா, நீர் என்னிடம் ஐந்து பொற்காசுகளைக் கொடுத்தீர். நான் அதை வைத்து மீண்டும் ஐந்து பொற்காசுகளைச் சம்பாதித்தேன் என்றார். இரண்டு பொற்காசுகளைப் பெற்றவரும் நீர் என்னிடம் இரண்டு பொற்காசுகளைக் கொடுத்தீர். நான் அதை வைத்து மீண்டும் இரண்டு பொற்காசுகளைச் சம்பாதித்தேன் என்றார்.

எஜமான் அதைக்கேட்டு, அவர்களைப் பாராட்டி உண்மையானவர்களே, நீங்கள், "உண்மையாய் இருந்தீர்கள், உங்களை எல்லாவற்றிலும் மேல் அதிகாரியாக வைப்பேன். உங்களுடைய எஜமானின் சந்தோஷத்துக்குள் நீங்கள் தூண்டுகோலாக இருப்பீர்கள்" என்றார்.

ஆனால் ஒரு பொற்காசுப் பெற்றவனோ, வந்து ஐயா, நீர் மிகவும் கடினமானவர்; விதைக்காத இடத்தில் அறுக்கிறவர் என்று அறிவேன். அதனால் நான் பயந்து அதை பூமிக்கடியில் ஒளித்து வைத்தேன். இதோ உம்முடைய பொற்காசு என்றார். இதைக் கேட்ட எஜமான் மிகவும் கோபப்பட்டு, துஷ்டனும் சோம்பேறியுமானவனே நான் விதைக்காத இடத்தில் சேர்க்கிறவர் என்று நீர் அறிவீர்.

## தெரிந்து கொள்வோம்

**நம் மொபைல் போனில் சேமித்து வைத்திருக்க வேண்டிய முக்கியமான மற்றும் அவசியமான தொடர்பு எண்கள்:**

* பேருந்துகள் சரியான நேரத்திற்கு வராதது, நடத்துனர் மீதி சில்லறைகளை கொடுக்காதது அல்லது மது குடித்து – விட்டோ, செல்போன் பேசிக்கொண்டோ ஓட்டுநர் பேருந்தை ஓட்டுவது போன்ற புகார்களுக்கு – 9383337639.

* பொருட்கள் வாங்கும் கடைகளில் ஏமாற்றபடுகிறவர்கள் என்றால் மாநில நுகர்வோர் கவுன்சிலருக்கு – (Toll Free Nos.) 180011400, 944546478, 7299998002, 7200018001, 044-28592828

* மனரீதியாக பாதிக்கப்பட்ட ஆதரவற்ற பெண்களை பாதுகாக்க – 044-26530504/ 26530599.

* வாடகை தாய்களாக போய், புரோக்கர்களிடம் ஏமாறும் பெண்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் – 044-26184392/9171313424.

* ரயில் பயணங்களின் போது பெண்களுக்கு ஆபத்து ஏற்பட்டால் – 044-25353999 / 9003161710/9962500500.

* ஆட்டோவில் அளவுக்கு அதிகமான குழந்தைகளை ஏற்றிச் சென்றால் – 044-24749002 /26744445.

* சென்னை கல்லூரிகளில் ராக்கிங் பற்றி மனித உரிமைகள் ஆணையம் – 044-22410377 /9500099100(sms).

* மாநகர பேருந்தில் அத்துமீறல் – 09383337639.

* போலீஸ் – 9500099100(sms).

* போலீஸ் மீது ஊழல் புகாருக்கு – 9840983832.

* போக்குவரத்து விதி மீறல் புகாருக்கு – 9840000103(sms).

* வங்கித் திருட்டு புகாருக்கு – 9840814100.

* வன்கொடுமை, பாலியல் ரீதியாக – 044-28551155.

Compiled By : Mr. M. Shahul Hameed
Marketing

அப்படியானால் அதைக் உழைப்பவர்கள் கையில் கொடுத்திருந்தால் என் பணத்துடன் சேர்த்து குறிப்பிட்ட வட்டியாவது கிடைத்திருக்கும், என்று கூறி அந்த ஒரு பொற்காசு-ஐ அவரிடமிருந்து எடுத்து பத்து பொற்காசுகளைக் கொண்டு வந்தவரிடம் கொடுத்தார்.

“உள்ளவன் எவனோ அவனுக்கும் கூட கொடுக்கப்படும், இல்லாதவன் எவனோ அவனிடத்தில் இருந்து உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்”.

“தன் வேலையில் ஜாக்கிரதை உள்ளவன் இராஜாக்களுக்கு முன்பாக நிற்கிறான், அதிக கனமும் பெறுகிறான்”.

Compiled By : Mr. Samuel S. Sekar
Marketing

## துன்பத்தில் இன்பம்

ஒரு ஊரில் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அதற்கு அருகாமையில் வசித்து வந்தவர்கள், அக்காட்டில் உள்ள மிருகங்களை வேட்டையாடியும், மரங்களை வெட்டி விற்பனை செய்தும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் யானைகளைப் பிடிப்பதற்காக யானைப் பதுக்குழி அமைத்து பிடிப்பது வழக்கம்.

ஒருநாள் அந்த காட்டில் சிங்கம் ஒன்று மிகுந்த பசியோடு இருந்தது. அதே வேளையில் மரம் வெட்ட சென்ற மனிதன் ஒருவர் தன் வேலையை முடித்துவிட்டு அந்த வழியாக வந்து கொண்டிருந்தான். அம்மனிதரைப் பார்த்த சந்தோஷத்தில் தன் உணவுக்காக அம்மனிதரை சிங்கம் துரத்தியது.

அம்மனிதர் பயந்து ஓட ஆரம்பித்தார். அவ்வாறு ஓடும்போது யானைப் பதுக்குழியில் காலை வைத்துவிட்டார். கால் வைத்த உடன் பதுக்குழியின் மேலாக இருந்த மரக்கிளைகள், அதன் ஆழ்குழியில் போய் விழுந்தன. அதே சமயத்தில் அங்கிருந்து பாம்பு ஒன்று சீறி எழுந்தது.

மேலே சிங்கம், கீழே பாம்பு என்ன செய்வதென்றறியாத விழிப்புணர்வு மிகுந்த அந்த மனிதர் உடனடியாக பதக்குழியின் அருகாமையில் உள்ள ஆலமரத்தில் இருந்து வந்த விழுதுகளை பிடித்து கொண்டார். பின்னர் மேலே செல்ல முடியாமலும், கீழே போக முடியாமலும் யோசனை செய்து கொண்டிருந்த போது மரத்தின் உயரத்தில் இருந்து சப்தம் வந்து கொண்டிருந்தது. என்னவென்று பார்த்தால் எலி ஒன்று இவர் தொங்கிக் கொண்டிருந்த விழுதைக் கடித்துக் கொண்டிருந்தது.

இதை சற்றும் எதிர்பார்க்காத மனிதர் விழுதுகளும் அற்று கீழே விழப்போகிறோம் என்று நினைத்து தன் வாழ்வின் கடைசி நிமிடங்களை கழித்துக் கொண்டிருந்தார். அப்போது மேலிருந்த தேன்கூட்டிலிருந்த தேன் ஒவ்வொரு சொட்டு சொட்டாக விழுந்தது.

இதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்த மனிதர் தன்னிடம் இருந்த அனைத்து துன்பங்களையும் மறந்து தேனை சுவைக்க ஆரம்பித்தார். நாமும் இக்கதை போன்று, இம்மனிதர் போன்று எந்த துன்பம் எவ்வளவு பெரிய துன்பம் எந்த நேரத்தில் இருந்தாலும் அதைக் கண்டு துவண்டுவிடாமல் இன்பத்தை கண்டு மகிழ்ச்சியாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

Compiled By : Mr. C. Azhakesan
Customer Care

## கவிதைகள்

### ஆசையே துன்பத்திற்கு காரணம்

புழுவிற்கு மீன் ஆசைப்பட்டது
மீனுக்கு மனிதன் ஆசைப்பட்டான்
மீனுக்கு சிக்கியது புழு
மனிதனுக்கு சிக்கியது மீன்.
புழுவிற்கு......?
ஆனால் காத்திருந்தது புழு
மனிதன் மண்ணுக்குள் வரும் வரை
யாரும் யாரை விடவும்
உயர்ந்தவருமில்லை......
தாழ்ந்தவருமில்லை......

Compiled By : Mrs. S.B. Kohila
Quality Control

## ESI NOTIFICATION

- Now Tiaano is in ESI range.
- ESI office located at:
  Employees' State Insurance
  Corporation Tambaram Dispensary
  Mudichur Road, West Tambaram
  Chennai – 600045
  Ph: 044 2226 0194
- Related with ESI details:
  Contact at Tiaano – HRD
  Ph: 044 2278 1148
- Eligibility for ESI claim:

Those who are all drawing the monthly gross salary less than or equal to Rs.15000/-.

## சிந்தனைக்கு

எழுந்திருங்கள், எழுந்திருங்கள், நீண்ட இரவு கழிந்து கொண்டிருந்தது, பகற் – பொழுது நெருங்கிக் கொண்டிருககிறது, அலை எழுந்து விட்டது, அதன் பெருவேகத்தை எதிர்த்து நிற்க எதனாலும் முடியாது. இளைஞர்களே, வேண்டுவ – தெல்லாம் உற்சாகம், உற்சாகமே!

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XLIII)

### காட்சியும் கட்டுப்பாடும்:

அனுமதிச் சீட்டு வாங்கியபிறகு, பாதுகாப்பு சோதனைகள், டீ காபி குடிப்பது, ஊரில் காத்திருக்கிற குழந்தைகளுக்கு பொம்மையோ சாக்லேட்டோ வாங்குவது, நண்பர்களுக்கு சிகரெட் பொட்டலங்கள், திரவப்பதார்த்தங்கள் வாங்குவது, இயற்கை அழைப்புக்கு ஒதுங்குவது என்று எதுவானாலும் எல்லாவற்றுக்கும் தனித்தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, தேடி அலைகிற அவசியமே இல்லை.

இதை போன்ற 'விஷீவல் கன்ட்ரோல்' பணியிடத்திலும் இருந்தால் எத்தனை வசதியாக இருக்கும்? ஸ்பேனர் தேடுகிற புது ஆள் தடுமாற வேண்டியதில்லை. அரிசியோ, பருப்போ தேடுகிற ப்ளஸ் டூ பையன், சரியான அலமாரிக்கு சென்று, சரியான டப்பாவை எடுத்துக் கொள்ள முடியும். இதற்கும் தெளிவாக வழி சொல்லித்தருகிறது 'செய்டன்'!

### இரண்டடி உலகம்:

சூரியக் குடும்பத்தில் உள்ள எல்லாக் கோள்களும், பூமி உட்பட, சூரியனை மையமாகக் கொண்டு சுழன்று வருகின்றன என்கிறது அறிவியல். இந்த உண்மையைக் கலீலியோ வெளிப்படையாக சொன்ன போது, மற்றவர்கள் எல்லாரும் அவர் மீது பாய்ந்து பிராண்டி விட்டார்கள். இந்தக் கோபத்துக்கு மதரீதியிலான சில காரணங்கள் இருப்பினும், அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும், நம்மை மையமாகக் கொண்டு தான் பூமி சுழன்று கொண்டிருக்கிறது என்று அபத்தமாக நம்புகிறோம். ஆனால், 'இப்படி நினைப்பதில் தப்பே இல்லை'! என்கிறது செய்டன். நம்மை மையமாகக் கொண்டு, சுமார் இரண்டு அடி ஆழத்தில் ஒரு வட்டம் வரைந்து கொள்ளுங்கள். அது தான் நம்முடைய பூமி. நம்மை ஆதாரமாக கொண்டு சுழல்கிற, நமக்கே ஆதாரமாக இருக்கிற பூமி.

பணியிடத்தைப் பொறுத்தவரை, இந்த இரண்டடி வட்டத்துக்குள், என்னவெல்லாம் நம்முடைய கைக்குக் கிடைக்கிறது என்பதைத்தான் நாம் முதலில் கவனிக்க வேண்டும்.

தொடரும்

## TITANIUM TANK

